A SINGAPORE PRESS HOLDINGS PU

நேற்றைய மதிப்பு
இந்திய ரூபாய்
$2.38க்கு ரூ.100
State Bank of India

உள்ளே

கால்களை
பாதிக்கும் நீரிழிவு



நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் கால்கள் உணர்வு இழந்து போவதால் காயம் ஏற்படலாம் என்கிறார் டாக்டர் கண்ணன்.

பக்கம் ▶8

# நீரிழிவு: பாதங்களைக் காக்க கலந்துரையாடல்




இந்திய சமூகத்தினரிடையே நீரிழிவு பரவலாகக் காணப்படும் ஒரு நோயாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கு மேற்பட்ட அத்தகைய நீரிழிவு நோயாளிகள், மருத்துவ மனைகளில் சேர்க்கப்படுவதற்கு நீரிழிவினால் அவர்களது பாதங் கள் பாதிக்கப்படுவது முக்கியக் காரணமாக இருப்பதால், இது குறித்த விழிப்புணர்வை ஏற் படுத்துவதற்காகப் பொது மக்களுக்கான கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இதில் தமிழில் உரையாற்ற உள்ளார், டான் டோக் செங் மருத்துவமனையின் டாக்டர் கண்ணன். கலந்துரையாடலும் தமிழிலேயே நடைபெறும்.

நிகழ்ச்சி வரும் 8ந் தேதி காலை 8:30 மணி முதல் 11 மணி வரை நடைபெற உள்ளது.

இடம்: டான் டோக் செங் அரங்கு, 1ம் தளம்.

இதற்கு திரு டென்னிஸை 63578266 என்ற எண்ணில் அழைத்துப் பதிவு செய்து கொள்ளலாம்.